
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜூன் 06, 2024 • புரட்சி 24 • முழக்கம் 21 • விலை ரூ.3.00

# சர்வாதிகாரத்துக்கு கடிவாளம்! மாநில உரிமைகளுக்கு பச்சைக் கொடி!

# தேர்தல் முடிவுகள் உணர்த்துவது என்ன?

**இந்தியாவை ஒற்றை சர்வாதிகார மதவெறி ஆட்சியை நோக்கி இழுத்துசென்ற பாசிச சக்திகளுக்கு கடிவாளம் போட்டிருக்கிறது இந்த தேர்தல் முடிவுகள். மாநிலங்கள் இல்லாமல் இந்தியா என்ற நாடு இல்லை என்பதையும் இந்த தேர்தல் முடிவுகள் உறுதியாக்கியிருக்கிறது. நடந்து முடிந்த தேர்தல் உணர்த்தும் பாடங்கள் என்ன?**

1. ஒரே நாடு, ஒரே பண்பாடு, ஒரே வரி, ஒரே மோடி என்ற ஆணவத்திற்கு மக்கள் சம்மட்டி அடிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தமுறை நானூறு இடங்கள் என்று முழங்கிவந்த பாஜக, கடந்தமுறை பெற்ற இடங்களை விட 59 இடங்களை இழந்திருக்கிறது. ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் மற்றும் பீகாரில் நிதிஷ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம் ஆகிய கட்சிகளுடன் கூட்டணியமைத்து ஆட்சியமைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது பாஜக.



2. தேசியக் கட்சியான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையானது மாநில உரிமைகளை கொள்கை அளவில் அங்கீகரித்துள்ளது. திராவிட இயக்கக் கொள்கைகளில் முதன்மையாக உள்ள இட ஒதுக்கீடு, பெண்ணுரிமை, மாநில உரிமைகளை அந்த அறிக்கை உரத்துப் பேசுகிறது. ஒற்றை ஆட்சிப் பார்வையில் மாநில உரிமைகளை தனது அதிகாரத் திமிரில் காலில் போட்டு மிதித்துவந்த மோடி மாநிலத்துக்கு ஏற்றார் போல் மாநிலப் பிரச்சனைகளை முன்வைத்து பேசினார். இந்தியா முழுவதும் சென்ற மோடியால் ஒரே கொள்கைகளையும், சாதனைகளையும் பேசமுடியவில்லை.

3. பாரதிய ஜனதா கட்சிக்கு அடையாளம் தரக்கூடிய கட்சியை புறந்தள்ளி கட்டமைக்கப்பட்ட மோடியின் பிம்பம் இப்போது உடைந்து நொறுங்கிவிட்டது. கடவுள் அவதாரமாகக் கூறிக்கொண்டவர் தனது வாரணாசி தொகுதியிலேயே நான்கு சுற்றுவரை பின்தங்கியது உலகம் முழுவதும் பேசு பொருளானது.

4. ஆட்சி அமைக்கக்கூடிய எண்ணிக்கையை மக்கள் மோடிக்கு தரவில்லை என்ற நிலையில் அவர் பதவி விலகியிருக்க வேண்டும். பதவிக்காகவே நான் கடவுளின் அவதாரம் என்று அரிதாரம் பூசிக்கொண்டவரிடம் நாம் அந்த பண்பை எதிர்பார்க்க முடியாது தான்.

5. மோடிக்கு வெண்சாமரம் வீசிக்கொண்டிருந்த மாநிலக் கட்சிகள் இந்த தேர்தலில் தோல்வியைப் பரிசாகப் பெற்றுள்ளனர். அ.இ.அ.தி.மு.க, பிஜூ ஜனதா தளம், ஒய்.எஸ்.ஆர்.காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் இந்த பட்டியலில் வருகின்றனர். ஒன்றிய ஆட்சியின் மக்கள் விரோத - மதவெறி திட்டங்களுக்கு கண்களை மூடிக்கொண்டு ஆதரவைத் தெரிவித்தவர்கள் இவர்கள்.

6. வட நாட்டு தேசிய ஊடகங்கள், பாஜகவின் ஊதுகுழலாகவே இந்த தேர்தலில் செயல்பட்டனர். இந்தியா கூட்டணியை உளவியல்ரீதியாக நிலைகுலைய வைக்க அவர்கள் அவிழ்த்துவிட்ட தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகள் தவிடுபொடியானது.

7. இஸ்லாமியர்கள் வெறுப்பை முன்வைத்து இந்துக்களின் ஓட்டை அறுவடை செய்துவிடலாம் என்ற மோடியின் நம்பிக்கையை மக்கள் தகர்த்தெறிந்துவிட்டார்கள்.

8. பாஜகவின் கோட்டையாக திகழ்ந்த உத்தரப்பிரதேசத்தில் உள்ள 80 தொகுதிகளில் 43 இடங்களை இந்தியா கூட்டணி வென்றுள்ளது. பாஜகவுக்கு கிடைத்த இடங்கள் 33 மட்டுமே. தேர்தலுக்கு முன்பே அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டிமுடித்து வாக்குகளை அறுவடை செய்துவிடலாம் என்ற திட்டமும் தூள்தூளானது. அயோத்தியை உள்ளடக்கிய ஃபைசாபாத் தொகுதியிலேயே பாஜக வேட்பாளர் லல்லுசிங், சமாஜ்வாதி வேட்பாளர் அவதேஸ்பிரசாத்திடம் தோற்றிருக்கிறார். ராம பகவான் தனது சொந்தக் கட்சி வேட்பாளரையே காப்பாற்ற முன்வரவில்லை. வாக்கு வித்தியாசம் 54,567.

9. யாதவ், முஸ்லிம்களின் கட்சியே சமாஜ்வாதி என்ற பிம்பத்தை அகிலேஷ்யாதவ் இம்முறை தகர்த்தார். அனைத்து பிற்படுத்தப்பட்ட மக்களின் கட்சி என்பதை உணர்த்த யாதவ் சமூகத்தை சேர்ந்த 5 வேட்பாளர்களை மட்டுமே அவர் களமிறக்கினார். அனைத்து பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த 27 வேட்பாளர்களை களமிறக்கியதோடு, இரண்டு பொதுத் தொகுதியிலும் இரண்டு தலித் வேட்பாளர்களை களமிறக்கினார். அயோத்தியை உள்ளடக்கிய ஃபைசாபாத் தொகுதியில் வெற்றிபெற்றிருப்பவர் சமாஜ்வாதி வேட்பாளர் அவதேஸ்பிரசாத் ஒரு தலித் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொரு தலித் வேட்பாளரான சுனிதா வெர்மா மீரட் தொகுதியில் பாஜக வேட்பாளரிடம் மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். ஆனாலும் தலித்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் மோடியை வீழ்த்த வேண்டும் என்ற பொது நோக்கத்துக்காக கை கோர்த்து நிற்கிறார்கள் என்ற செய்தி மாநிலம் முழுவதும் கொண்டுசென்றது. இந்து ஆங்கில நாளேட்டில் 05.06.2024இல் வெளிவந்துள்ள ஒரு கட்டுரை. இது தமிழ்நாட்டையும் உத்தரப்பிரதேசத்தையும் ஒப்பிட்டுக்காட்டியுள்ளது. இரண்டு கட்சிகளுமே மதவாதத்தை வீழ்த்த சமூகநீதியை களத்துக்கு கொண்டுவந்தது தான் இப்போது கிடைத்திருக்கிற வெற்றி என்று அக்கட்டுரை கூறுகிறது.

10. மோடி மூன்றாவது முறையாக பதவியேற்றாலும், அவரது சர்வாதிகாரம் முடிவுக்கு வந்துவிட்டது என்று பலரும் இப்போது சுட்டிக்காட்டிவருகிறார்கள். குறிப்பாக முன்னாள் பிரதமர் வாஜ்பாயிடம் ஆலோசகராக இருந்த சுதேந்திரநாத் குல்கர்னி என்பவர், இந்து ஆங்கில நாளேட்டுக்கு 05.06.2024 அன்று எழுதியுள்ள கட்டுரையில் ”மோடி கடந்தகால மோடி அல்ல; சிதைந்த பிம்பத்தோடு அவர் பிரதமராக வருகிறார். கடந்த காலங்களைப் போல இனி அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்த முடியாது. அரசியல் சட்டத்தை சிதைத்து விடக்கூடாது என்பதற்காக மக்கள் அவருக்கு ஆப்பு வைத்துவிட்டார்கள்” என்று அந்த கட்டுரை கூறுகிறது.

11. இந்த தேர்தலில் சமூகநீதி எனும் ஒளிச்சுடரை ஏந்தி பல இளைஞர்கள் களத்துக்கு வந்தார்கள். உதயநிதி ஸ்டாலின், ராகுல்காந்தி, அகிலேஷ், பிரியங்கா, தேஜஸ்வி உள்ளிட்ட இளைஞர்கள் மதவாதத்துக்கு எதிராக களத்துக்கு வந்துள்ளனர். ஜூன் 4ஆம் தேதிக்கு பின்னர் திமுக காணாமல் போய்விடும் என்று மோடி கூறினார்.

12. இப்போது நாற்பது தொகுதிகளிலும் வெற்றி வாகை சூடி கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது தமிழ்நாடு. ஆனால் பாஜக வேட்பாளர்களின் டெபாசிட் தான் காணாமல் போயிருக்கிறது. இந்த வெற்றிக் களத்தை சாதித்த பெருமை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கே உண்டு. இதில் உதயநிதியின் தீவிரப் பரப்புரையையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். இந்தியா கூட்டணியை சேதாரம் எதுவுமின்றி, இணைந்த கரங்களாக வழிநடத்திச் செல்லும் வழிமுறைகளில் இந்தியாவுக்கே மு.க.ஸ்டாலின் முன்மாதிரியாக திகழ்கிறார்.

2004ஆம் ஆண்டுக்கு பிறகு நாற்பது தொகுதிகளிலும் திமுக கூட்டணியை வெற்றிபெறச் செய்து மதவாத சந்தர்ப்பவாத சக்திகளை வீழ்த்தியிருக்கிறார். ஆளும் பாசிச பாஜகவை எதிர்த்து கொள்கை போராட்டம் நடத்தும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு மட்டும் இருந்தது. இப்போது வட மாநிலங்களிலும் இந்த போராட்டம் தொடங்கியிருக்கிறது என்பதை தேர்தல் முடிவுகள் உணர்த்துகிறது. மதம் பிடித்த காட்டு யானையை மக்கள் சக்தி என்ற அங்குசம் இந்த தேர்தல் களத்தில் ஒரு கட்டுக்குள் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. மாநிலங்களை ஒடுக்கும் ஒற்றை இந்தியா கூச்சலையும் மவுனமாக்கி இருக்கிறது இந்த மக்கள் சக்தி!

**விடுதலை இராசேந்திரன்**
**பொதுச்செயலாளர்**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

## தலையங்கம்

# மண்ணைக் கவ்வியது மதவாதம்!

நடைபெற்று முடிந்திருக்கிற நாடாளுமன்றத் தேர்தல் பாரதிய ஜனதா கட்சியின் ஆணவத்தையும், ஆர்.எஸ்.எஸ்.ஸின் இந்துராஷ்டிரக் கனவையும் அடித்து நொறுக்கியிருக்கிறது. ‘‘கண்ணுக்கு எட்டியவரை எதிரிகளே இல்லை, மோடி கடவுளின் அவதாரம், கடவுளுக்கு தோல்வி ஏது’’ என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்த இந்துத்துவவாதிகளை, ஆட்சியமைக்க அல்லல்படும் நிலைக்கு மக்கள் தள்ளியிருக்கிறார்கள். நானுறு தொகுதிகளுக்கு மேல் மிக எளிதாக வென்று விடலாம் என்று கூறியதோடு மட்டுமில்லாமல், அதுதான் மக்களின் தீர்ப்பு என்பதைப் போல பெரும்பாலான ஊடகங்களையும் பேச வைத்தது பாஜக. ஆனால் பாஜக வென்றிருப்பதோ வெறும் 240 தொகுதிகளில் மட்டுமே.

சிறுபான்மை மக்களுக்கு எதிரான மதவாத வெறுப்புப் பேச்சை நீக்கிவிட்டால் மோடியின் பரப்புரையில் வேறெதுவுமே இருக்கவில்லை. இதன்மூலம் பெரும்பான்மை இந்துக்களை அணிதிரட்டி, அவர்களின் வாக்குகளை அறுவடை செய்துவிடலாம் என்பது பாஜகவின் கனவு. ஆனால் மக்கள் அந்த கனவில் மண்ணைத் தூவி பாஜகவை பெரும்பான்மை இல்லாமல் செய்துவிட்டார்கள். மாநிலக் கட்சிகளை ஒழித்துக் கட்டுவது என்ற சபதமெடுத்தது போல செயல்பட்டவர்கள், இப்போது பெரும்பான்மைக்கு தேவையான இடங்களுக்காக மாநிலக் கட்சிகளின் காலடியில் வீழ்ந்து கிடக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தை ஒழித்துக்கட்டிவிட்டு அந்த இடத்தில் மனுசாஸ்திரத்தை வைத்து நிரப்ப முயற்சித்தவர்கள், இனி ஒவ்வொரு சட்டத்தை திருத்தும்போதும் மாநிலக் கட்சிகளின் தயவுக்காக ஏங்கி நிற்கும் நிலையில் இருக்கிறார்கள்.

கலவரத்தால் மணிப்பூரை சிதைத்த பாஜகவை மெய்தி மக்களும், குக்கி மக்களும் ஒட்டுமொத்தமாக நிராகரித்து விட்டார்கள். மீண்டும் வெற்றி பெற்று வரும்போது, மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவோம் என்பதை மாபெரும் இலட்சியமாக கூறினார்கள். ‘‘உ.பி.–யில் மட்டுமே 200 தொகுதிகளை உருவாக்குவோம், வரும் காலங்களில் இந்தி பேசும் மாநிலங்களில் மட்டுமே பெரும்பான்மை இடங்கள் கிடைத்துவிடும்’’ என்றெல்லாம் பாஜகவினர் பேசினார்கள். ஆனால் உத்தரப் பிரதேச மக்களே பாஜகவின் இத்தகைய ஆணவப்போக்கை விரும்பவில்லை. மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தாமல், மக்களவைத் தொகுதிகளை உயர்த்துவது முக்கியமில்லை என்று உ.பி. மக்கள் பாஜகவுக்கு தோல்வியைப் பரிசாகக் கொடுத்துவிட்டார்கள்.

வெற்றி பெற்றால் ராமர் கோயிலுக்கு அழைத்துச்செல்வோம் என்று கூறியே நாடு முழுக்க வாக்கு சேகரித்தார்கள். கடைசியில் அயோத்தியை உள்ளடக்கிய ஃபைசாபாத் தொகுதியிலேயே ராமர் அவர்களை கைவிட்டுவிட்டார். சமூகநீதியைப் பேசும் சமாஜ்வாதிதான் அங்கு வெற்றி பெற்றிருக்கிறது. அந்த விரக்தியில் தேர்தல் முடிந்தவுடன் ‘ஜெய் ஸ்ரீராம்’ என்ற வழக்கமான முழக்கத்திற்குப் பதிலாக ‘ஜெய் ஜெகநாத்’ எனக் கூறியிருக்கிறார் நரேந்திர மோடி. ஒடிசாவில் உள்ள புரி ஜெகநாதர் கோயில் கருவூல சாவியை தமிழ்நாட்டிற்கு திருடிச் சென்றுவிட்டார்கள் என்று பரப்புரையில் மோடி பேசி, இப்போது அம்மாநிலத்தில் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது பாஜக. எனவேதான் இப்போது ராமரை கைவிட்டுவிட்டு, ஜெகநாதரை துணைக்கு அழைத்திருக்கிறார் மோடி. அடுத்த தேர்தலில் ஜெகநாதரும் கைவிட்டுவிட்டால், வேறு கடவுளைத்தான் தேட வேண்டியிருக்கும்.

அய்தராபாத்தில் பாஜக வேட்பாளர் மாதவி, பரப்புரையின்போது மசூதியை நோக்கி அம்பு எய்வது போல செய்துகாட்டினார். அனுமதிபெறாமல் ராம நவமி பேரணி நடத்தினார். வாக்குப்பதிவு நாளன்று வாக்களிக்கச் சென்ற இசுலாமிய பெண்களிடம் ஹிஜாப்பை கழட்டச் சொல்லி அடாவடியில் ஈடுபட்டார். 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மாதவியை தோற்கடிக்கச் செய்திருக்கிறார்கள் மக்கள். அதேபோல தமிழ்நாட்டிலும் விருதுநகர் தொகுதியில் பாஜக வேட்பாளர் ராதிகா வெற்றி பெற வேண்டுமென்று அவரது கணவர் சரத்குமார் அங்கபிரதட்சனம் செய்தார். அதே தொகுதியில் தேமுதிக வேட்பாளர் விஜய பிரபாகரன் வெற்றி பெற வேண்டுமென்று அவரது தாய் பிரேமலதா விஜயகாந்த் தியானம் செய்தார். இருவரில் யாரை வெற்றி பெறச் செய்வது என்று கடவுளே குழம்பிவிட்டார் போல. கடைசியில், காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம்தாகூர் வெற்றி பெற்றுவிட்டார்.

திமுக கூட்டணி ஒரு தொகுதியில் கூட வெல்லாது என்றெல்லாம் பாஜக தலைவர் அண்ணாமலை சவால் விட்டார். ஆனால் நாற்பது தொகுதிகளிலும் பாஜகவும், அதிமுகவும் மண்ணைக் கவ்வியிருக்கிறது. பாஜக உடனான கூட்டணியை முறித்துவிட்டால் மட்டும் மக்கள் நம்பிவிட மாட்டார்கள், பாஜகவின் மதவாத அரசியலுக்கு எதிராக வலுவாகச் செயல்பட்டால் மட்டுமே வாக்களிப்பார்கள் என்று எடப்பாடி பழனிசாமிக்கு இத்தேர்தல் முடிவுகள் நன்கு உணர்த்தியிருக்கிறது. மதவாதத்திற்கு எதிரான, சமூகநீதியைக் காக்கிற அரசியல் மட்டுமே தமிழ்நாட்டில் எடுபடும் என்பதை தேர்தல் முடிவுகள் மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கின்றன. தமிழ்நாட்டின் இந்த சூத்திரத்தைப் பின்பற்றி, இந்தியா கூட்டணியும் முன்னேறியிருக்கிறது. பாஜக வீழ்த்த முடியாத கட்சியும் இல்லை, இந்துத்துவம் வீழ்த்த முடியாத சித்தாந்தமும் இல்லை என்பதே தேர்தல் முடிவுகள் உணர்த்தும் செய்தி.

முழுமையாக வீழ்த்தப்படாவிட்டாலும், பல் பிடுங்கப்பட்ட பாம்பின் நிலையில் பாஜக இருக்கிறது. இந்த வெற்றிகரமான தோல்வி பாஜகவுக்கு பாடமாக அமையட்டும். பன்முகத்தன்மையை, கூட்டாட்சியை சிதைக்கிற சிறு முயற்சி கூட, பாஜகவின் அரசியல் அதிகாரக் கனவை தகர்த்துவிடும் என்பதை உணர வேண்டும். இத்தகைய நெருக்கடி நிலைக்கு பாஜகவை தள்ளி, அரசியலமைப்புச் சட்டத்தை காக்க உறுதியோடு களத்தில் நின்ற ஜனநாயக சக்திகளின் பணிகள் தொடரட்டும்.

# தப்பிவிடுகிறார்களா சூத்ரதாரிகள்?

*சமூகச் செயல்பாட்டாளர் நரேந்திர தபோல்கர் படுகொலை தொடர்பாகப் பத்தாண்டுகளாக நடைபெற்ற வழக்கில், இருவருக்கு (மட்டும்!) ஆயுள் தண்டனை வழங்கியுள்ளது, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்ட சிறப்பு நீதிமன்றம். தீர்ப்பு எழுதிய நீதிபதி பிரபாகர் ஜாதவ், “இந்த இருவர் தங்களுக்கு இடப்பட்ட வேலையைச் செய்து முடித்தவர்கள். ஆனால், அந்தத் திட்டத்தைத் தீட்டியது வேறு யாரோ(வாக இருக்கும்)” என்று குறிப்பிட்டிருந்தார். கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா என்ன?*

*மூடநம்பிக்கைகளுக்கு எதிரான விழிப்புணர்வைப் பரப்பிவந்தவர் தபோல்கர். மூடநம்பிக்கைகள், கட்டுக்கதைகள் போன்றவற்றில் இருந்தெல்லாம் சமூகம் விடுபட்டுவிடக் கூடாது என்று நினைப்பவர்கள்தானே தபோல்கரைக் குறிவைத்திருக்க வேண்டும்? அந்தச் சூத்ரதாரிகளுக்கு ஏன் தண்டனை கிடைக்கவில்லை?*

*அடுத்தடுத்துப் படுகொலைகள்: தபோல்கரைத் தனது விரோதி என்று வெளிப்படையாக எச்சரித்தவர், வீரேந்திரசிங் சரத்சந்திர தவாதே. இந்நிலையில்தான் 2013 ஆகஸ்ட் 20 அன்று புணே நகரில் காலை நடைப்பயிற்சியின்போது மிகவும் குறுகிய இடைவெளியில் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார் தபோல்கர்.*

*ஆனால், தவாதே உள்ளிட்ட மூவர் போதுமான சாட்சியங்கள் இல்லை என்று விடுவிக்கப்பட்டுள்ளனர். அப்படியானால், யார் சொல்லி அல்லது யார் தூண்டுதலின்பேரில் அந்த இரண்டு பேர் தபோல்கரைச் சுட்டுக் கொன்றனர் என்ற கேள்விக்கு விடை இல்லையா?*

*‘தபோல்கருக்கு ஆன அதே கதிதான் உனக்கும்’ என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட பொதுவுடைமைச் சிந்தனையாளர் கோவிந்த் பன்சாரே, பிப்ரவரி 16, 2015இல் அதேபோல் நடைப்பயிற்சியில் இருக்கும்போது, மிக அருகில் இரு சக்கர வாகனத்தில் வந்த கொலையாளிகளால் சுடப்பட்டு, மருத்துவமனை சிகிச்சை பலனின்றி பிப்ரவரி 20 அன்று மரணம் அடைந்தார். இந்தப் படுகொலைகளைக் கண்டித்த எம்.எம்.கல்புர்கி, கௌரி லங்கேஷ் ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டனர்.*

*இந்தக் குற்றச் செயல்கள் அரங்கேற்றப்பட்ட விதம் மட்டுமல்ல, பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் உள்ளிட்ட பல அம்சங்கள் ஒன்றுபோல் அமைந்திருப்பது அப்போதே அம்பலமானது. தபோல்கர் வழக்கில் மட்டும் தீர்ப்பு வந்துள்ளது, மற்றவை விசாரணையில் உள்ளன.*

*யார் குற்றம்? – தபோல்கர் கொலை வழக்கு விசாரணையின் ஒரு கட்டத்தில், தபோல்கர் இந்து மத விரோதி என்று முன்வைக்கப்பட்ட வாதத்தை அதிர்ச்சியோடு குறிப்பிடுகிறது ‘தி இந்து’ தலையங்கம். மூடநம்பிக்கை ஒழிப்பு மசோதா மகாராஷ்டிர சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட அவர் காரணமாக இருந்தார் என்பதுதான் வலதுசாரி இந்துத்துவ வெறிக் கும்பலின் வெஞ்சினம். ‘சனாதன ஸம்ஸ்தான்’ என்கிற தீவிர வலதுசாரி அமைப்புதான் இந்தக் கைவரிசைக்குக் காரணம் என்று அப்போதே அடையாளப்படுத்தப்பட்டது. அப்படியிருக்க, எப்படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் மூவர் மீது போதிய சாட்சியங்கள் இல்லாமல் போயின?*

*சத்ரபதி சிவாஜி இஸ்லாமிய வெறுப்பாளர் அல்ல; மதநல்லிணக்கம் பாராட்டியவர் என்ற விஷயத்தை வரலாற்றுத் தரவுகளோடு புத்தகமாக எழுதி வெளியிட்டவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினராக இருந்த தொழிற்சங்கத் தலைவர் கோவிந்த் பன்சாரே. அது மட்டுமல்ல, கோலாப்பூர் பல்கலைக்கழகக் கூட்டம் ஒன்றில், காந்தியைக் கொன்ற நாதுராம் கோட்ஸேவுக்குச் சிலை வைக்கத் துடிக்கும் முயற்சிகளுக்கு எதிராக முழங்கியவர். அவரைத் தீர்த்துக்கட்ட வேண்டும் என்ற குரல் அங்கேயே எழுப்பப்பட்டது.*

*நரேந்திர தபோல்கர் கொலை வழக்கில், சம்பந்தப்பட்ட அனைவரையும் முழுமையாக விசாரணைக்கு உள்படுத்தி, உடனடியாகத் தண்டிக்காததன் விளைவாகவே அடுத்த நான்கு ஆண்டுகளில் நான்கு முக்கிய ஆளுமைகள் கொல்லப்பட்ட அவலம் நேர்ந்தது.*

*இந்தக் கொலைகளுக்கு ஆதரவாக சமூக ஊடகங்களில் வெறித்தனமான விஷக் கருத்துகள் தொடர்ந்து பதிவுசெய்யப்பட்டு வந்ததும் கவனிக்கத்தக்கது. கல்புர்கிக்கு வலதுசாரி மத வெறியர்களிடமிருந்து மிரட்டல்கள் இருந்துவந்தது வெளிப்படையானது. கௌரி லங்கேஷை எதிர்த்து மத வெறியர்கள் சமூக ஊடகங்களில் மிக மோசமாக எழுதிக்கொண்டிருந்ததும் வெளிப்படையானது.*

*கௌரி லங்கேஷ் கொல்லப்பட்ட செய்தி வந்த அடுத்த சில நிமிடங்களில் வலதுசாரி மதவெறி ஆள்கள் உற்சாகம் பொங்க வரவேற்றுக் கொண்டாடினர். கொலைகாரனைப் பாராட்டியும், பட்டியல் இன்னும் முடியவில்லை – படுகொலைகள் தொடர வேண்டும் என்றும் சமூக ஊடகங்களில் பதிவிட்டுக் கொண்டாடி மகிழ்ந்தது ஒரு கூட்டம்.*

*“என்னை மகனே என்று அன்போடு அழைத்த தாயைப் பறிகொடுத்துவிட்டேனே” என்று டெல்லி ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் இயக்கத் தலைவராக இருந்த கன்னையா குமார், அப்போது வருத்தத்தோடு செய்திருந்த பதிவுக்கு எதிராக வந்து விழுந்த பதில்களில் ஒன்றைப் பாருங்கள்: “கவலைப்படாதே, உன்னைத் தத்தெடுத்துக்கொண்ட தாய் சென்ற இடத்துக்கே நீயும் கூடிய விரைவில் கொண்டுசேர்க்கப்படுவாய்.”*

*நம்பிக்கையூட்டும் குரல்கள்: இந்த அராஜகங்களுக்கு மத்தியில், ஜனநாயகம் பற்றிய ஆகப்பெரிய நம்பிக்கை அளிக்கும் நிகழ்ச்சிகளும் நடப்பதுதான் முக்கியமானது. 2015 பிப்ரவரியில் கோவிந்த் பன்சாரேயின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான உழைப்பாளி மக்கள், தூய்மைப் பணியாளர்கள் தங்களது உரிமைக் காவலர் மரித்த வேதனையோடும், மதவெறி சக்திகளுக்கு எதிரான ஆவேசத்தோடும் திரண்டிருந்தனர்.*

*‘நாங்கள் தபோல்கர்கள், நாங்கள் பன்சாரேக்கள்’ என்று உரத்த முழக்கம் எழுப்பினர். 2017 செப் 12 அன்று பெங்களூருவில் கௌரி லங்கேஷுக்கான இரங்கல் கூட்டம் நடைபெற்றபோது திரண்ட 25 ஆயிரம் பேரும், ‘நான் கௌரி’ என்று முழக்கம் எழுப்பியது இப்போது நினைத்துப் பார்க்கும்போதும் சிலிர்க்க வைப்பது.*

*தன்னைப் பற்றி இணையத்தில் அவதூறு செய்த இளைஞர் ஒருவருக்கு, கௌரி லங்கேஷ் அனுப்பிய பதில்: “மகனே, நீ தவறான வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டிருக்கிறாய். உன் பாதையை எங்கோ தவற விட்டுவிட்டாய்... என்னைக் காண நேரில் வாயேன்... ஒரு கோப்பை காபி அருந்தியபடியே நாம் விவாதிக்கலாம்!” ஆனால், அவரைச் சுட்டுக்கொன்றவர்களின் சிந்தனையோட்டம் எப்படியானது?*

*இந்தப் படுகொலைகளுக்குக் காரணமாக இருந்தவர்கள் எல்லோரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, உரிய தண்டனைகளுக்கு உள்படுத்தப்பட வேண்டியது இந்தக் காலத்தின் முக்கியமான தேவை. நமது அரசமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடிக்கும் விழுமியங்களில் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ள முடியாது என்று விடுக்கும் செய்தியாக அது இருக்கும்!*

# நீதித்துறை ஒழுங்கைக் கெடுக்கும் ஜி.ஆர்.சாமிநாதன்!

# உள்நோக்கத்தோடு வழங்கப்படும் தீர்ப்புகள்

**பிறர் சாப்பிட்ட எச்சில் இலையில் பக்தர்கள் உருள விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி உத்தரவிட்ட உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதனின் தீர்ப்பை கண்டித்து, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடிதம் எழுதியுள்ளார். இதுதொடர்பாக *Voice of South* யூடியூப் சேனலுக்கு கழகத் தலைவர் அளித்த நேர்காணல்.**

**நெறியாளர்:** ஜி.ஆர்.சாமிநாதனின் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் புகார் மனு அளித்து உள்ளீர்களே! எதனால்?

**கொளத்தூர் மணி :** கரூர் மாவட்டம் நெரூரில் ஒரு துறவியின் சமாதிக்கு வருகிறவர்கள் உண்ணும் எச்சில் இலைகளில் பக்தர்கள் உருளுவதை ஒரு பழக்கமாக வைத்திருந்துள்ளார்கள். அதை நீண்டகாலமான பழக்கம் என்றுசொல்லி, மனித மாண்புக்கு எதிரான ஒரு செயலை செய்துகொண்டிருந்தார்கள். இதைத் தடை செய்ய வேண்டுமென்று தலித் பாண்டியன் என்பவர் 2015ஆம் ஆண்டில் வழக்கு தொடர்ந்தார். நீதிபதி திரு மணிக்குமார், நீதிபதி திரு வேலுமணி ஆகிய இருவர் அடங்கிய அமர்வு இந்த வழக்கில் அளித்த தீர்ப்பில், கர்நாடகாவின் தென் கடலோரப் பகுதியில் இதேபோன்று நடந்த நிகழ்வையும், அந்த வழக்கில் 2014ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தடை செய்து அளித்த தீர்ப்பையும் சுட்டிக்காட்டினர். மனித மாண்புக்கு எதிரான அந்த நிகழ்வு இங்கும் தடை செய்யப்பட்டது.

ஆனால் இவ்வளவு ஆண்டுகள் கழித்து இப்போது மீண்டும் அந்த பழக்கத்தை தொடர வேண்டுமென்று வழக்கு தொடர்ந்திருக்கிறார் ஒருவர். எச்சில் இலையில் உருளுவதற்கு அனுமதி வேண்டுமென்று 22ஆம் தேதி அரசு அதிகாரிகளிடம் முறையிட்டிருக்கிறார். அந்த மனு அதிகாரிகளின் கைகளை சென்றடையவே 2 அல்லது 3 நாட்கள் ஆகியிருக்கக்கூடும். ஆனால் அதுவரை அவரால் காத்திருக்க முடியாமல், ஏப்ரல் 25ஆம் தேதி வழக்கு தொடுத்தார். நான்கே நாட்களில் உயர்நீதிமன்ற மதுரைக்கிளை அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. ஏப்ரல் 29ஆம் தேதி வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் காவல்துறையை எதிர்மனுதாரராக சேர்க்கவில்லை என்று, நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் தானாகவே சேர்த்துக்கொண்டார்.

உடனே காவல்துறை பதிலளிக்க வேண்டுமென்று கூறி விசாரணையை 30ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார். அடுத்த மாதம் (மே) 18ஆம் தேதிதான் அந்த நிகழ்ச்சி நடக்கவே போகிறது. ஆனாலும் நீதிபதி விசாரணைக்கு அவ்வளவு அவசரம் காட்டினார். அடுத்தநாள் விடுமுறை வருகிறது என்பதால், அதற்குள் தானே தீர்ப்பு வழங்கிவிட வேண்டுமென்று ஜி.ஆர். சாமிநாதன் அவசரம் காட்டியிருக்கிறார் என்று இதைப் புரிந்துகொள்கிறேன். அடுத்தநாள், அதாவது ஏப்ரல் 30ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, அரசுத் தரப்பு விவரங்களை சேகரித்து வாதாடுவதற்கு கூட உரிய வாய்ப்பு வழங்கப்படவில்லை. உடனடியாக ஒரே நாளில் இரு நீதிபதிகள் அமர்வின் முந்தைய தீர்ப்பை நிறுத்திவைப்பதாக உத்தரவிட்டார் ஜி.ஆர். சாமிநாதன்.

சரி, அதன்பிறகு இந்த வழக்கை விசாரித்து விரைவில் தீர்ப்பு வழங்கியிருக்கலாம். நீண்ட விசாரணை தேவைப்படும் வழக்கு அல்ல இது. குறைந்தது 10ஆம் தேதிக்குள்ளாவது தீர்ப்பை வழங்கியிருக்கலாம். ஆனால் மே 18-ஆம் தேதி அந்த நிகழ்வு நடைபெறும் நிலையில், மே 17-ஆம் தேதிதான் தீர்ப்பை வழங்கினார். "எச்சில் இலையில் உருளுவதற்கு உனக்கு உரிமை உண்டு, மதம் அந்த சுதந்திரத்தை வழங்கியிருக்கிறது" என்பது அத்தீர்ப்பு. இது தவறானது என்று அரசுத் தரப்பு கருதினால் கூட, மேல்முறையீட்டுக்குச் செல்ல வாய்ப்பு கிடைக்காத வகையில் தாமதித்து தீர்ப்பு கொடுத்திருக்கிறார். எனவே இவையெல்லாம் திட்டமிட்டு நடந்தது போல தெரிகிறது.

உச்சநீதிமன்றம் தடை செய்த ஒன்றை, அதனை சுட்டிக்காட்டி உயர்நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு அளித்த



தீர்ப்பை ரத்து செய்து, இப்போது ஒரு நீதிபதியான ஜி.ஆர்.சாமிநாதன் தீர்ப்பு வழங்கியிருக்கிறார். மதச் சுதந்திரம் என்றாலும் மனித மாண்புக்கு எதிராக இருக்கக்கூடாது என்பது முன்பு அவர்கள் அளித்த தீர்ப்பு. அரசியலமைப்பு நெறிக்கு எதிரானது என்பதையெல்லாம் கருத்தில்கொண்டே அத்தீர்ப்பு வழங்கப்பட்டது. மதத்தின் பெயரால் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்றால் 'உடன்கட்டை ஏறுதல்' இப்போதுவரை தொடர்ந்திருக்கும். இப்போது ஜி.ஆர்.சாமிநாதன் அளித்திருக்கும் தீர்ப்பில், "இரு நீதிபதிகள் அமர்வு நடத்திய விசாரணையில் எதிர் மனுதாரர்களாக பக்தர்களை சேர்த்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை என்பதால் அந்தத் தீர்ப்பை ரத்து செய்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

ஒருவேளை ஜி.ஆர்.சாமிநாதனுக்கு இதில் முரண்பட்ட கருத்து இருக்குமானால் கூட, தலைமை நீதிபதிக்கு இதைத் தெரிவித்து 3 நீதிபதிகள் அமர்வு விசாரிக்க பரிந்துரைக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாமல், இரு நீதிபதிகள் அமர்வு அளித்த தீர்ப்பு செல்லாது இன்று இவராகவே அறிவிக்கிறார். இதுபோல இரு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பை ஒரு நீதிபதி ரத்து செய்யலாமா என்பது குறித்த அரசியலமைப்புச் சிக்கல்கள் தொடர்பாக ஏற்கெனவே சில வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்துள்ளன. அது தவறு என்றும் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. முதலில் ஒரு நீதிபதி, அடுத்து இரு அமர்வு, அதிலும் தீர்வு கிடைக்காவிட்டால் உச்சநீதிமன்றத்தில் ஒரு நீதிபதி, பிறகு அமர்வுகள் என முறையீட்டுக்கு செல்லலாம். ஐந்து நீதிபதிகள் அல்லது 13 நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வுக்கு கூட செல்ல அரசியலமைப்புச் சட்டத்தில் வாய்ப்புகள் உள்ளன. ஆனால் இரு நீதிபதிகள் அளித்த தீர்ப்பை ஒரு நீதிபதியான ஜி.ஆர்.சாமிநாதன் செல்லாது என அறிவிப்பது அரசியலமைப்பு நடைமுறைக்கு முரணானது.

**நெறியாளர்:** ஆனால்"இது பழமையான நிகழ்ச்சி, 150 ஆண்டுகளாகப் பின்பற்றி வருகிறார்கள், பக்தர்கள் தானாகவே உருளுகிறார்கள். யாரும் வற்புறுத்திச் செய்யவில்லை. எனவே அனுமதி கொடுக்கலாம்" என்று ஜி.ஆர்.சாமிநாதன் குறிப்பிட்டுள்ளாரே?

**கொளத்தூர் மணி:** 150 ஆண்டுகளாக நடைபெறுகிறது என்று சொல்வதற்கு என்ன ஆதாரங்கள் உள்ளன? அவர்கள் விருப்பம்போல சொல்லிக்கொள்வார்கள். இந்து மத புராணக் கதைகள் கூட அப்படித்தான் உள்ளன. உச்சநீதிமன்றம் தடை செய்த கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற சம்பவம், 500 ஆண்டுகளாக பழக்கத்தில் இருந்தது. எனவே அப்படிப் பார்த்தால்கூட இதில் கர்நாடகாவின் பழக்க வழக்கத்தை விட கரூர் நிகழ்வின் பழக்க வழக்கம் என்பது சுமார் 350 ஆண்டுகள் குறைவுதான். சரி, காவல்துறையை வழக்கில் இவராகவே இணைத்தார். காவல்துறையை விசாரிப்பதற்கு என்று வேறு அமர்வு இருக்கிறது. இவர் ரிட் மனுவை விசாரிக்கும் அமர்வில் உள்ளார். எனவே உரிய அமர்வுக்கு விசாரணையை மாற்றாமல், இவர் விசாரித்து தீர்ப்பை வழங்கியிருக்கிறார். இதை சுட்டிக்காட்டி நாளை ஒரு மாவட்ட நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் அளித்த தீர்ப்பை ரத்து செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். நீதித்துறையின் மாண்பு என்ன ஆவது என்று யோசித்துப் பாருங்கள். ஜி.ஆர்.சாமிநாதன் அளித்த தீர்ப்பும் அப்படித்தான் நீதிமன்றத்தின் மாண்பை சீர்குலைக்கிறது. நீதிமன்றப் படிநிலைகளை மீறி ஜி.ஆர்.சாமிநாதன் தீர்ப்பு வழங்கியிருக்கிறார். இது வீண் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

இன்னொன்றையும் ஜி.ஆர்.சாமிநாதன் அந்தத் தீர்ப்பில் கூறியிருக்கிறார். "*Right to move* ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் இந்தியாவின் எந்த பகுதிக்கு வேண்டுமானாலும் செல்கின்ற உரிமை உள்ளது. இதில் *move* என்பதை நடந்து செல்வதையோ அல்லது வாகனங்களில் செல்வதையோ மட்டும் எடுத்துக்கொள்ளக் கூடாது. அங்கபிரதட்சனமும் ஒரு *move*-தான். அதுவும் *Right to move*-தான்" என்று சொல்லியிருக்கிறார் ஜி.ஆர்.சாமிநாதன். சரி, இதையே எடுத்துக்கொண்டு, நாளையே ஒரு பத்து பேர் தேசிய நெடுஞ்சாலைக்கு சென்று உருண்டு செல்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு, போக்குவரத்து விதிகளுக்கு உட்பட்டு இடதுபுறமாகவே உருண்டு செல்கிறோம் என்று கூறி, உருண்டு சென்றால் போக்குவரத்து என்ன ஆவது? எனவே இப்படியெல்லாம் அபத்தமான விளக்கங்களைச் சொல்லி, ஒரு தீர்ப்புக்கு சப்பைக்கட்டு கட்ட வேண்டிய அவசியம் என்ன வந்தது என்பதே நமது கேள்வி.

"உச்சநீதிமன்றத் தீர்ப்பில் பார்ப்பனர்கள் சாப்பிட்ட எச்சில் இலை என்றே குறிப்பிட்டு உள்ளார்கள். ஆனால் கரூர் விவகாரத்தைப் பொறுத்தவரையில் பார்ப்பனர்கள் மட்டுமல்ல, எல்லா சமூகத்தினரும் சாப்பிட்ட எச்சில் இலையில் பக்தர்கள் உருளுகிறார்கள். எனவே அதுவும் இதுவும் ஒன்றல்ல" என கூறியிருக்கிறார் ஜி.ஆர்.சாமிநாதன். இதையெல்லாம் தீர விசாரித்து அறிந்த பிறகே இரு நீதிபதிகள் அமர்வு தீர்ப்பு வழங்கியது. அரசியல் சட்டம் தனி மனிதர்களைத்தான் சொல்கிறதே பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதோர் என்றெல்லாம் பிரித்துச் சொல்லவில்லை. யார் சாப்பிட்ட எச்சில் இலையாக இருந்தாலும் அதன் மீது உருளுவது மனித மாண்புக்கு எதிரானது.

மறுமணம் குறித்து பெரியார் போன்ற தலைவர்கள் பேசினார்கள், பரப்புரை செய்தார்கள். அது பார்ப்பனர் அல்லாதோருக்கு மட்டும்தான் என்று பார்ப்பனப் பெண்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருந்துவிட்டார்களா? முன்பெல்லாம் கணவனை இழந்த பார்ப்பனப் பெண்கள் மொட்டை அடிக்கப்பட்டு, மூலையில் அமர வைக்கப்படுவார்கள். ஆனால் இப்போது மிக இயல்பாக பொதுவெளிக்கு வருகிறார்கள். மறுமணம் செய்கிறார்கள். அது வரவேற்கப்பட வேண்டியதுதான். பார்ப்பனர் அல்லாதோருக்கு மட்டும் பெரியார் இதைச் சொல்லவில்லை. பார்ப்பன சமூகத்துப் பெண்களுக்கும் சேர்த்தே சொன்னார், அவர்களும் அதனால் இன்று பயன்பெற்றார்கள் என்பதற்காக இதை ஒப்பிடுகிறேன்.

மத உரிமையை அடிப்படை உரிமை என்று சொல்கிறார்கள். சரி அடிப்படைக் கடமைகள் சிலவற்றையும் அரசியல் சட்டம் சொல்கிறது. கடமையைச் செய்யாமல் உரிமையை மட்டும் கோரிக் கொண்டிருக்க முடியாது. ஒவ்வொரு குடிமகனுக்கும் அறிவியல் மனப்பான்மை வேண்டும், எதைப்பற்றியும் ஆய்ந்து பார்க்கிற மனப்பான்மை வேண்டும், மனிதநேயம் வேண்டும், சமூகத்தை சீர்திருத்த வேண்டும் என்றும் அரசியல் சட்டம் சொல்கிறது. இவையெல்லாம் கடமைகள். எச்சில் இலையில் உருளுவது இதற்கெல்லாம் எதிராகத்தானே இருக்கிறது?

எச்சில் இலையில் உருண்டால் ஆன்ம பலம் வருகிறது, தோல் நோய்கள் தீர்க்கப்படுகிறது என்றெல்லாம் கூறுகிறார்கள். பார்ப்பனர் அல்லாதோருக்கு ஆன்ம பலம் வந்தால் மட்டும் போதுமா? பார்ப்பனர்களுக்கு வர வேண்டாமா? பார்ப்பனர்களின் தோல் நோய்கள் தீர வேண்டாமா? அவர்கள் ஏன் எச்சில் இலைகள் மீது உருளுவது இல்லை? சரி, மத உரிமை என்ற பெயரில் உடன்கட்டை ஏறுகிறேன் என்று எந்த பெண்ணாவது கேட்டால், அனுமதிக்க முடியுமா? மூடநம்பிக்கையின் அடிப்படையில் மத உரிமையை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று ஏற்கெனவே வேறொரு தீர்ப்பில் ஜி.ஆர். சாமிநாதனே கூறியிருக்கிறார். இப்போது அவரே இப்படி மாற்றிச் சொல்கிறார். அதுமட்டுமல்ல, நீதிமன்றத்திற்கு இதைத் தடை செய்ய உரிமையில்லை, அரசுதான் தடை செய்திருக்க வேண்டுமென்றும் கூறுகிறார். நீதிமன்றத்திற்கு அனுமதிக்க மட்டும் உரிமை இருக்கிறதா என்று நாம் கேட்கிறோம்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# புதிய பாய்ச்சலுக்கு தயாராகும் பள்ளிக்கல்வித்துறை

**எஸ்.வி.வேணுகோபாலன்**

பிரிட்டன் கூட்டமைப்பின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான ஸ்காட்லாந்து தேசிய நூலகத்தை பார்வையிட்ட அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அங்கு அமர்ந்து ஒரு நூலினை வாசித்தபோது...

குழந்தைகளை மையப்படுத்திய கொண்டாட்டமான கல்வி அளிப்பதில் சிறந்து விளங்கும் சுவீடன், நார்வே, டென்மார்க், ஸ்காட்லாந்து உள்ளிட்ட நாடுகளின் கல்வி அமைப்பைப் பார்வையிட தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கடந்த வாரம் சென்றிருந்தார்.

அந்நாடுகளின் பள்ளிக்கூட வகுப்பறை செயல்பாடுகள், நூலகங்கள் உள்ளிட்டவற்றை ஒவ்வொன்றாகக் கவனித்தவர் அது தொடர்பான தகவல்களை சமூக ஊடக பக்கங்களில் அவ்வப்போது பகிர்ந்து வந்தார். இதில், 75 மொழிகள் பேசக்கூடிய மக்கள் வசிக்கும் சுவீடன் நாட்டில் அனைவரின் தாய்மொழிக்கும் முக்கியத்துவம் அளிக்கும் முறை பின்பற்றப்பட்டு வருவதை வியப்புடன் பகிர்ந்திருந்தார்.

தமிழ்நாடு அரசு பள்ளிகளை அடுத்தகட்ட பாய்ச்சலுக்கு தயார்ப்படுத்தும் நோக்கில் இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. படிப்புக்குப் பசி ஒருபோதும் தடைக்கல்லாக இருத்தலாகாது என்று அரசு பள்ளிக்கூடத்தில் மதிய உணவுத்திட்டத்தை அறிமுகம் செய்து நாட்டிற்கே வழிகாட்டிய மாநிலம் தமிழ்நாடு.

இலக்கை நோக்கிய நீண்ட பயணத்தில் அடுத்தடுத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை சிற்றுண்டித்திட்டம், அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவசக் கல்வி மற்றும் உபகரணங்கள், மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் உள்ளிட்ட தொழில் கல்வி படிப்புகளில் 7.5% இட ஒதுக்கீடு, உயர்கல்வி பயிலும் மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கும் சேர்த்து மாதந்தோறும் ஊக்கத்தொகை, தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசு பணியில் 20% முன்னுரிமை உள்ளிட்ட மேலும் பல நலத்திட்டங்களை அமல்படுத்தியதன் விளைவாக இன்று தேசிய அளவிலான பள்ளிக்கல்வி தரவரிசை பட்டியலில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

இந்நிலையில், அண்டை மாநிலங்களுடன் ஒப்பிட்டு பெருமை கொள்வதைக்காட்டிலும் கல்வியில் தலைசிறந்த நாடுகளிடமிருந்து தமிழ்நாடு எதையெல்லாம் கற்றறிந்து செயல்படுத்த வேண்டும் என்கிற இடத்துக்கு தற்போது முன்னேறி உள்ளது பாராட்டத்தக்கது.

பாகுபாட்டுக்கு எதிரான சட்டம்! - அதிலும் நோபல் பரிசின் தாய்வீடான சுவீடனிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ள அநேகம் இருக்கவே செய்கிறது. நாங்குநேரி சாதி வெறி சம்பவத்திலிருந்து மாணவர் சின்னதுரை மீண்டெழுந்து பிளஸ் 2 தேர்வில் தடம் பதித்திருக்கும் இவ்வேளையில் இனி ஒருபோதும் இத்தகைய அநீதி தமிழ்நாட்டில் நிகழ்ந்துவிடக் கூடாது என்கிற சிந்தனை பேசுபொருளாகி இருக்கிறது.

இந்த விஷயத்தில் சுவீடன் கல்விச் சட்டம் முன்மாதிரியாகத் திகழ்கிறது. பள்ளி மாணவர்களுக்கு எதிரான ஏற்றத்தாழ்வு மற்றும் அவமதிப்பைக் களைவதில் தீவிரத்தன்மையுடன் ‘பாகுபாட்டுக்கு எதிரான சுவீடன் சட்டம்’ அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி சுவீடன் பள்ளி ஆசிரியர்கள் தங்கள் மாணவர்கள் சமமாக நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டியது கட்டாயம்.

பள்ளி மாணவர்கள் எவரேனும் அவமதிக்கப்பட்டாலோ, தாழ்வாக நடத்தப்பட்டாலோ அதற்கான பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்க வேண்டும் என்று சட்டம் சொல்கிறது. இதிலிருந்து ஊக்கம் பெற்று ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகளுக்கான உடன்படிக்கையில் 2020ஆம் ஆண்டில் சுவீடன் சட்டம் இணைக்கப்பட்டது.

ஜிடிபியின் பெரும்பகுதி கல்விக்கு: அடுத்து, ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சி படிப்புவரை அங்கு அரசாங்கமே முற்றிலும் இலவசமாக வழங்கிவருகிறது. தனியார் கல்வி நிறுவனங்கள் செயல்பட்டாலும் சொற்ப எண்ணிக்கையில் மட்டுமே அங்கு மாணவர் சேர்க்கை நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. மிக முக்கியமாக ஜிடிபியில் பெரும்பகுதியைக் கல்விக்கு சுவீடன் செலவிடுகிறது. இச்சமயத்தில் இந்தியாவில் கல்வியின் முக்கியத்துவத்தை முதன்முதலில் அழுத்தமாக உணர்த்திய 1968ஆம் ஆண்டின் கோத்தாரி ஆணையத்தின் பரிந்துரை நினைவுகூரத்தக்கது.

14 வயதுவரை கட்டாய இலவச கல்வி, பெண்கல்வி உள்ளிட்ட முற்போக்கான இலக்குகளை வெளிப்படுத்திய கோத்தாரி ஆணையத்தின் பல பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டதும் இன்று நாம் அடைந்திருக்கும் வளர்ச்சிக்கு அச்சாணி எனலாம். இருப்பினும் கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி பற்றாக் குறையால் 55 ஆண்டுகள் கடந்தும் பல இலக்குகள் எட்டப்படாமல் இருக்கின்றன.

அதேபோன்று வகுப்பறையில் பாலின சமத்துவம் இன்றியமையாதது என்கிறது சுவீடன் கல்வி அமைப்பு. அனைத்து வகுப்புகளில் பயிலும் மாணவர்களும் மாணவிகளும் சுமுகமாக இணைந்து கற்றல் நடவடிக்கையில் ஈடுபடும் முறை அங்கு பின்பற்றப்படுகிறது. ஆனால், இன்றும் தமிழ்நாட்டில் உள்ள பல இருபாலர் பள்ளிகளில் இடைநிலை வகுப்பைத் தாண்டியவுடன் மாணவனும் மாணவியும் பேசி பழகவோ, இணைந்து அமர்ந்து படிக்கவோ அனுமதிக்கும் முதிர்ச்சி பல ஆசிரியர்களிடம் இல்லை என்பதுதான் கசப்பான நிதர்சனம்.

சுவீடன் பள்ளிகளில் சுவீடிஷ் மொழி, ஆங்கிலம், கணிதம், அறிவியல் என மொத்தம் 16 பாடப்பிரிவுகள் அனைத்து பள்ளிகளிலும் கற்பிக்கப்படுகின்றன. இதில் கைவினை, விளையாட்டு, இசை, காட்சிக்கலை, வீட்டுப் பொருளியல் (Home Economics) போன்ற பாடங்களும் முதன்மை பாடங்களுக்கு இணையாக பயிற்றுவிக்கப்படுவது கவனிக்கத்தக்கது.

வீட்டுப் பொருளியல் என்பது பசித்தவனுக்கு மீனை உண்ணக் கொடுப்பதை விட மீன் பிடிக்கக் கற்றுக்கொடுப்பதே சிறந்தது எனும் தத்துவத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்ட பாடத்திட்டமாகும். அன்றாட வாழ்க்கையில் நாம் செய்து வரும் செயல்கள் இந்த பாடப்பிரிவில் முறைப்படி கற்பிக்கப்படுகிறது. பணித்திறன்களோடு சேர்த்து வாழ்க்கைத்திறன்களையும் நாமும் நமது மாணவர்களுக்குக் கற்பிப்போமா!

**நன்றி : இந்து தமிழ் திசை**

## தமிழ்நாடு வெற்றிக்கு கழகத் தோழர்களின் பங்களிப்பு!

பாஜகவுக்கும் அதற்கு பல்லக்கு தூக்கி வந்த அதிமுகவுக்கும் சரியான பாடத்தை தமிழ்நாடு தந்துள்ளது. மொத்தம் உள்ள 40 தொகுதிகளிலும் வென்று இந்தியா கூட்டணியில் செல்வாக்கு மிக்க தலைவராக உயர்ந்து நிற்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்த வெற்றிகளுக்கு பின்னால் பல இயக்கங்களின் கடும் உழைப்பு இருந்திருக்கிறது. திராவிடர் விடுதலைக் கழகம் தேர்தல் அறிவிப்பு வருவதற்கு முன்பே களமிறங்கியது. பாஜக - மோடி தமிழ்நாட்டு மக்களுக்கு இழைத்த துரோகங்களையும், தமிழக அரசின் சாதனைகளையும் தெருமுனைக் கூட்டங்களாக தமிழ்நாடு முழுவதும் கொண்டு சென்றது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டங்களை எந்த பொருளாதார வசதியும் இல்லாத கழகத் தோழர்கள் உற்சாகத்துடன் நடத்திக் காட்டினார்கள். குறிப்பாக சென்னையில் மட்டும் 200க்கும் மேற்பட்ட தெருமுனைக் கூட்டங்கள் இடைவிடாமல் நடத்தப்பட்டன. கழகத் தோழர்களின் இந்த உழைப்பு இந்த வெற்றிக்கு பங்களித்துள்ளது. ஒவ்வொரு நாளும் ஒரு மாதத்துக்கு மேல் சொந்த வேலைகளை ஒதுக்கி வைத்து இந்தக் கொள்கைப் பணியை செய்த தோழர்களின் உழைப்பு வீணாகி விடவில்லை. பெரியார் மண்ணில் பார்ப்பனிய மத வெறி சக்திகள் முழுமையாக வீழ்த்தப்படும் வரை கழகத் தோழர்களின் இந்த பணி தொடரும்! தொடரும்! தொடர்ந்து கொண்டே இருக்கும்!!

**கழகப் பொதுச்செயலாளரின் முகநூல் பதிவு (06.06.2024)**

## திண்டுக்கல்லில் பயிலரங்கம்

திண்டுக்கல் மாவட்டக் கழக சார்பில் இரண்டு நாள் “பெரியாரியல் பயிலரங்கம்” ஜூன் 11,12 ஆகிய தேதிகளில் பழனி – தாராபுரம் சாலையில் அமைந்துள்ள கீரனூர் S.M மினி மகாலில் நடைபெறவுள்ளது.

இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெரியார் – அம்பேத்கர் – மார்க்ஸ் இன்றைய பொருத்தப்பாடு என்ற தலைப்பிலும், பெரியார் மீதான அவதூறுகளும், திராவிட இயக்கத்தின் இன்றைய தேவைகளும் என்ற தலைப்பிலும் வகுப்பு நடத்தவுள்ளார்.

மேலும் கழக முன்னணியினர் வகுப்பெடுக்கவுள்ளனர்.

பயிலரங்கில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட எண்ணை தொடர்பு கொள்ளவும்

மருதமூர்த்தி – 9940969803
மாவட்ட அமைப்பாளர், திண்டுக்கல்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted June 07, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran